# அரசறிவியல்

## சமூக ஜனநாயகம்



© www.e-thaksalawa.moe.gov.lk

- **தேர்ச்சி :-** 05
- **தேர்ச்சி மட்டம் :- 5.1.4** சமூக ஜனநாயக கருத்தியலின் அடிப்படைப் பண்பு, அரசியல் துறைகள், செயற்பாடுகள் பற்றி அறிந்துகொள்வர்

## சமூக ஜனநாயகம்

தாரண்மை வாத ஜனநாயகக் கோட்பாடுகளும் சம தர்மப் பொருளாதார கோட்பாடுகளும் இணைக்கப்பட்டு உருவாக்கப்பட்ட கலப்பு முறை எனக் கருதப்படுகிறது இதன் படி தாரண்மை வாதத்தில் காணப்படும் யாப்பு கட்டுப்பாடு, பொறுப்பு, தேர்தல், அரசியல் கட்சிகள், அமுக்கக் குழுக்கள், நீதிச் சுதந்திரம் ஆகிய அனைத்து பண்புகளும் இதில் நடைமுறையில் இருப்பதைக் காணலாம்.

- இதன் அடிப்படை இயல்பு பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்வதில் அரசின் கூடிய தலையீடு காணப்படுவதாகும்
- ஆயினும் சம தர்ம யாப்பு போன்று இறுக்கமான ஒருமுகப்படுத்தப்பட்ட திட்டமிடலின் கீழ் அரசாங்கம் பொருளாதாரத்தை கட்டுப்படுத்துவதில்லை .
- இதன் முன்னோடியாக ஜேர்மன் சமூக ஜனநாயக கட்சியின் தலைவர் எட்வர்ட் பேன்ஸ்டைன் ஆவார்
- சமூக ஜனநாயகம் தோற்றம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் ஆரம்பமாகி தற்காலத்தில் செயற்பட்டு வருகிறது
- மாக்சிச செல்வாக்கை பெற்றுக் கொண்டு அதனையே தனது நிலைப்பாடாக கொண்டும் ஐரோப்பாவில் சமூக ஜனநாயகம் தோற்றம் பெற்றது. ஆரம்பத்தில் மாக்சிசதின் செல்வாக்கை பெற்றது .
- ஆனால் 20ஆம் ஆரம்ப தசாப்தங்களில் சமூக ஜனநாயகமாறு மாக்சிச புரட்சிகர சமவுடமையிலிருந்து வேறுபட்ட கருத்தியல் முனைப்பையும் அரசியல் ரீதியான அடையாளத்தையும் பெற்றது


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

- 1930 களின் பின்னர் அரசின் நலன்புரிவாதக் கருத்து சமூக ஜனநாயக சிந்தனையுடன் ஒன்றிணைந்து சமூக ஜனநாயகத்தை சமவுடைமை வாதத்தின் மென் துறையாக கருதுவதற்கான பின்னணியாக இச் சிந்தனை காணப்பட்டது.
- சமூக ஜனநாயகத்தின் பிரதான அடிப்படைகளாக முதலாளித்துவம் தீவிர பொருளாதார சமநிலை, வறுமை மற்றும் சமூக அநீதிகளுக்கு முதலாளித்துவத்தினுள் தீவிரமின்மையால் அந்த முறையை நிராகரிக்க வேண்டும்
- முதலாளித்துவத்திற்கு மாற்றீடாக தோற்றம் பெற்ற சமவுடைமை வாதம் முதலாளித்துவத்தின் மூலம் ஏற்பட்ட பிரச்சனைக்கு சிறந்த முன் மொழிவுகளை செய்தது எனினும் புரட்சி ஒன்றினூடாக மாற்றமடைய வைப்பது அதாவது சமவுடைமை வாதத்தை தோற்றுவிப்பது மாக்சிச வாதத்தின் அப்பால் பட்டதாக அமைகிறது
- முதலாளித்துவ முறைமை, சமூக சமத்துவம் மற்றும் சமூக நீதி பற்றிய சமவுடைமைவாத அடிப்படைகளின் சீர்திருத்தங்களை மேற்கொள்வதன் மூலம் முதலாளித்துவத்தின் பிரச்சனைகளுக்கு சமவுடைமைவாத தீர்வுகளை பெற்றுக் கொடுக்க வேண்டும்

முதலாளித்துவத்தை சமவுடைமைவாத அடிப்படைகளுக்கு ஏற்ப மறுசீரமைப்பு செய்யும் போதனா கொள்கை ரீதியான அடிப்படைகளாக

**பொருளாதாரத்தில் அரசின் தலையீடு**

- அரச தலையீடுகளற்ற தாரண்மை முதலாளித்துவ அடிப்படையில் இருந்து தெளிவாக வேறுபடுத்தலாகும்
- அரச தலையீட்டின் மூலம் பொருளாதாரத்தின் போக்கினை நிருவகித்தல் மற்றும் வழிநடத்தக் கூடியதாக இருத்தல்
- இதன் மூலம் சந்தைப் பொருளாதாரத்தினால் ஏற்படும் பாதகமான சமூக பொருளாதார விளைவுகளுக்கு தீர்வு காணமுடியும்.

**கலப்பு பொருளாதாரம்**

- இதனூடாக முதலாளித்துவ மற்றும் சமவுடைமைவாத பொருளாதார அடிப்படைகளையும் கொள்கைகளையும் ஒன்றிணைந்தால்
- சந்தைப் பொருளாதாரம் இடம் பெறும் அதே நேரம் அதனை அரசு நிருவகித்தல் கலப்பு பொருளாதாரத்தின் பிரதான பண்பாகும்.


Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

| | |
|---|---|
| சமூக நலன்புரி | ❖ சிந்தனை சக்திகள் மூலம் நலன்புரிகளை வலுப்படுத்தியுள்ளதாக நம்பப்படுகின்றது.<br>❖ முதலாளித்துவ தாரண்மைவாத பொருளாதார முறையில் சமூக நலன்புரி என்ற எண்ணக்கரு காணப்படுவதில்லை.<br>❖ முதலாளித்துவம் கூறும் சுதந்திர சந்தையானது அச்சமநிலையை ஏற்படுத்துமே தவிர இவற்றுக்கான தீர்வுகளை பெற்றுக்கொடுக்காது<br>❖ சமூக ஜனநாயகம் நலன்புரி விடயங்களை முன்மொழிந்துள்ளது. |
| செல்வம் மற்றும் வருமானங்களை சமூகத்துக்கு மீள பகிர்ந்தளித்தல் | ❖ சொத்துக்கள் குவிந்து காணப்படும் முதலாளித்துவ பொருளாதரத்தில் சமூக ஜனநாயகம் வருமானம் மற்றும் செல்வங்களை மீள பகிர்ந்தளிக்கும் எண்ணக்கருவினை மாற்றீடாக முன்மொழிந்தது<br>❖ செல்வந்தர்களிடம் இருந்து பெறும் வரி வருமானங்களை சமூக நலன்புரி செயற்பாடுகளுக்கென மேற்கொள்ளுதல் பிரதான உபாயமாகும். |
| கூட்டு பேரம் பேசுதல் | சமூக ஜனநாயக இயக்கம் வரலாற்று ரீதியாக தொழிலாளர் வகுப்பின் மீது கட்டி எழுப்பப்பட்டதாகும். எனவே மாக்சிச கருத்தியலில் உள்ளவர்கள் அதிலிருந்து ஒத்து போகாமல் சமூக ஜனநாயகம் உருவானது. மாக்சிச மற்றும் முதலாளித்துவ சிந்தனைக் கலப்பே சமூக ஜனநாயகமாகும்<br>❖ ஜேர்மனிய சமூக ஜனநாயக கட்சியின் தலைவர் எட்வர்ட் பேன்ஸ்டைன் இதன் முன்னோடி<br>❖ இவர்கள் தொழிலாளர் புரட்சியை ஏற்காமல் பாராளுமன்ற சீர்திருத்தம் ஊடாக உரிமையை பெற முயன்றனர்<br>❖ முதலாளித்துவத்தில் பொது நல அரசு மற்றும் கலப்பு பொருளாதாரமும் காணப்படும்.<br>❖ தொழிலாளர் வகுப்பின் ஊதியம் மற்றும் வாழ்க்கைத் தரத்தை பாதுகாத்து கொள்வன நோக்காகக் கொண்டு பிரபுக்களோடு கூட்டு ஒப்பந்தங்களை ஏற்படுத்தி கொள்வதற்கான அடிப்படைகளை வழங்குவது சக ஜனநாயகத்தின் பிரதான பண்பாகும். |



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## வினாக்கள்

- எவ்விரு கருத்தியல்களின் கலப்பாக சமூக ஜனநாயகம் கருத்தியல் காணப்படுகின்றது ?

**Ans**
மாக்சிசம்
முதலாளித்துவம்

- சமூக ஜனநாயகத்தின் முன்னோடியாக கருதப்படுபவர் யார் ?

**Ans**
எட்வர்ட்(பேன்ஸ்டைன்)

- சமூக ஜனநாயக கருத்தியல் எப்பொருளாதாரத்தை முன்மொழிகின்றது ?

**Ans**
கலப்

- சமூக ஜனநாயக அரசியல் யாப்பு எவ் அரசை வலியுறுத்துகிறது ?

**Ans**
நலன்புரி

- சமூக ஜனநாயக எண்ணக்கரு எவ் நூற்றாண்டு காலத்தில் ஆரம்பமாகியது ?

**Ans**
20ஆம் நுற்றாண்டில்

- சமூக ஜனநாயக அரசியல் கருத்தியலை ஆராய்க ?

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk